ரெஜிஸ்டர் நெ. M. 3855.

கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 5. மே, 1942 நெ. 2.

5/0

எடிடோரியல் கமிட்டி.

ஸ்ரீமான்கள்

பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம்.எல்.எ.

எஸ். சத்தியநாராயண

எடிடர்.

ஸ்ரீமான்

வி. வியன்ன, பி.எ., பி.எல்.

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்

டெலிபோன் நெ. 86166.

பொருள் அடக்கம்.

1. தலையங்கம்—

பஞ்சாயத்துகளுக்குச் சொந்தமாக்கவேண்டிய பொது சொத்துக்கள் 209

வாசகர்களே—தயவுசெய்து பொரம்போக்குகளைமாற்றும் விஷயத்தில் உங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைக்குறித்து தெரிவியுங்கள் 213

பஞ்சாயத்துகளுக்கு விண்ணப்பம் 213

2. விவசாய சங்கங்களும், அவைகள் ஏற்படுத்தும் முறையும், நடவடிக்கைகளும் 214

3. கிராமவாசிகளின் நிலைமை அபிவிருத்தி 215

4. கால் நடைகளின் தீனி சேமிப்பு 217

5. வர்த்தமானங்களும், குறிப்புகளும் 220

கிராம பஞ்சாயத்து போர்டின் கடமை.

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்.

The Village Panchayat Journal.

VOL. V] MAY, 1942. [No. 2.

The Editorial Committee do not hold themselves responsible for views expressed by contributors. Contributors are requested to write legibly and on one side of the paper. Manuscripts will not be returned unless stamps are sent to cover postage. Matter intended for the issue of any particular month should reach the Committee before the 15th of the previous month.

Communal property vesting in Panchayats.

Every village has communal property—variously known as Porambokes, Village sites, Tank-Porambokes, thrashing floors etc. The origin of this property can be traced to the foundation of the village itself. It was intended for the promotion of the corporate life in the village where the main occupation has been Agriculture from days immemorial. Ancient rulers with great foresight created various kinds of communal property in every village to serve as means of communications, (Road Porambokes, or Donkas) for heaping and thrashing paddy and other grain in thrashing floors (Kallams) and for building houses, holding fairs and festivals etc. on village sites (GRAMA KANTHAM or GRAMA NATTAM). Along with this communal property, communal services were created for the benefit of the villagers. The village community as a unit is the beneficial enjoyer of the communal property and village services and the State is only the trustee. So long as the Village and the village community existed and so long as the necessity for the property existed, no one, not even the State can put an end to this property and services. It is only when the purpose for which it was created, ceases to exist, that the State can deal with the same. This proposition is well recognised in Law and admits of no doubt. Any attempt to strike at this communal property and services will result in the deterioration of the corporate life of the village community.

The villagers, since days immemorial have been administering the affairs of the village and looking after all communal property, communal services etc. through the village Panchayats. Uttera Merur inscriptions, Manu, Kautilya in his Artha Sastra, Budhistic literatute all describe how these Panchayats administered the village communal property. Though in theory the Crown is the ulimate owner of the property, nay of the whole country, Ancient Rulers,

intended this property for the villagers' benefit and left its management entirely in the hands of the Village Panchayats. This has been the state of affairs during the Hindu and Muhammadan rule. The British Government from the days of the East India Company and ever since 1802, in its various standing orders preserved and respected this communal property. But we are constrained to find of late a sort of apathy on the part of the heads of the Districts, who ceased to evince interest in the villages and left them to the mercy of the Local Officers. These officials recommend the granting on Pattas, of Village Porambokes and village sites and thereby commenced the process of the destruction of this very essential village property. The wishes of the villagers are rarely considered or ascertained. Though since 1920, there are Panchayats in many villages and though the Government ordained that the opinion of the Panchayats should be ascertained before any communal property is granted on Patta, rarely was such action taken. The village panchayat was ignored and the welfare of the village community was neglected. We can give numerous instances of village Porambokes—roads leading to fields being given away on Patta, after being converted as Assessed waste—fit for being granted on Patta, the villagers or village Panchayat was never consulted when this procedure was adopted. The village officers, in association with the Revenue Inspector submit proposals to the Tahasildar. The Tahasildar as is the case with the present day administration acts on such proposals and communal Porambokes are classified as Assessed waste. Then follow proposals for alienating these Assessed waste lands. The next result has been the slow destruction of village communal property. We had occasion in this JOURNAL to stress about the disintegration of communal services and the Government by making suitable amendments to the Board's Standing Orders have contributed towards their stabilisation, though much remains to be done for their complete preservation. Now the tide is turning against communal property. We may also mention here that village sites—Grama Kanthams—Grama Nattams—have been similarly alienated and granted on Patta to private individuals. The situation has become very serious threatening the existence of this very essential and necessary village communal property. Act XV of 1920 was first enacted constituting village panchayats. By 1930 there came into existence nearly 7,000 panchayats. These Panchayats have been alloted certain functions which embrace many aspects of village life. In 1930 the Local Boards' Act was amended and Act XV of 1920 was repealed. But no suitable provision has been made in neither of these Acts entrusting Panchayats with this Communal property. Between 1924 and 1930 many Panchayats laid out Roads along Village Porambokes with the aid of the Government grants. In as much as this village communal property is supposed

to vest in the Government, the local Revenue Officials with a false and misguided antipathy towards Panchayats objected to the laying of Roads or improving these ancient Village Roads—Porambokes. The question arose whether these Porambokes should be transferred to Panchayats before Panchayats can do any thing regarding them. On a reference to Mr. T. G. Rutherford, the then Registrar General of Panchayats, he gave his opinion that for improving and laying out roads, Panchayats need not get a transfer of the Porambokes. But recently the Government, obviously differing from Rutherford's opinion, held that Panchayats cannot spend any amount even for laying out roads or improving them without first obtaining a transfer from the Revenue Department. Some Panchayats were threatened with surcharge. In 1926 Government passed orders for the transfer of village communal Porambokes on an application by Panchayat. The Revenue Board issued instructions to the District Collectors to favourably consider requests by Panchayats for transfer of Porambokes. Almost all Panchayats applied to the Revenue Department for such transfer. We can safely assert that almost all the requests have either been turned down or no orders have been passed on applications for transfer even after 3 years or 4 years. With the result between 1936 and 1942 many Panchayats have not been able to spend any monies on the improvement of these village roads. Mr. D. N. Strathi who was Inspector of Local Boards between 1937 to 1939 gathered statistics as to the extent of funds remaining unspent in the Panchayats and the reasons why these sums were so unspent but were locked up in Banks. We suggest a careful consideration by the Advisor to His Excellency of this report.

Instances have come to our notice of cases where Panchayats could not store on a corner of the village site rubbish gathered by the scavengers and of Panchayats inability to put up sheds for the scavengers. In all these cases the Revenue Department attempted to treat as encroachment and penalise the panchayat on the ground that the village site does not vest in the Panchayat and no transfer has been obtained.

We have been stressing all along the necessity for vesting in every Panchayat all communal property in the village without any necessity for a formal Transfer. The conference of Panchayats held in 1938 passed a resolution to the same effect. In the memorandum submitted by the Madras Provincial Union of Panchayat Boards to Mr. T. G. Rutherford on the recent Panchayat Bill, the union pressed the question for favourable consideration. The Select Committee of Advisors to the Bill appointed by the Government will have to take up this question. Until and unless this question is satisfactorily settled, no panchayat can effectively function and discharge its duties

The Panchayat should no longer depend on the local revenue officers for a formal transfer. Statutory vesting will have to be provided for.

It may be apprehended that some Panchayats may misuse this power and alienate the communal property—once it is vested in the panchayat statutorily. But we are confident that necessary checks can be provided by the legislature.

We earnestly hope that the adviser to His Excellency will set right the anomoly and restore to the village community, its right to look after all communal property. There is no use, much less any justification for retaining the control of the revenue department over this communal property. Experience for over two decades has demonstrated that panchayats cannot expect orders of transfer, much less expeditious orders—transferring Porambokes to Panchayats—Experience so far gained reveals a determination on the part of the local Revenue Officers to defeat the orders of Government on the subject of transferring porambokes to panchayats. Without vesting in panchayats all communal property, there can be no reform of panchayats and it will be misnomer to speak of reviving Ancient Village Republic and restoring to the village its ancient glory.

Readers—please send your experiences—of getting transfer of porambokes.

We have written in this issue about the delays in getting transfer of porambokes from Revenue Department. We know many instances when panchayats have addressed the Local officers for transfer of porambokes and have not got orders or got orders after considerable delay. We have been pressing Government to vest all communal property in village panchayats statutorily and without any necessity for getting transfer. We request panchayats to send us their experience in this matter.

Appeal to Panchayats.

We have sent V.P's. to panchayats for subscription due for 1941-42. Nearly 300 panchayats refused V.P's. though they got the journal for 1941-1942. These panchayats never informed us not to send the journal. As such we do not know under what circumstances V.P's. have been refused.

The Subscription was only Rs. 2 a year which any poor panchayat can sent. We have been stating that the strength of the union lay in the strength of its members. The union is the institution of panchayat The union has been fighting for panchayats and looking after their interests.

As such we earnestly request all panchayats who have refused V. P. to reconsider the matter and resolve to pay the arrear and also extend all encouragement to the union and the journal for 1942-1943. Owing to the rise in the price of paper, Government has sanctioned the subscription of Rs. 3 a year instead of Rs. 2 a year. We request every panchayat to budget for Rs. 3 and send the amount to us as soon as possible. Without money nothing can be done.

கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

Vol. 5	மே, 1942.	No. 2

நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப்தாரி ஆகிறதில்லை. இந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற்செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.

தலையங்கம்.

பஞ்சாயத்துகளுக்குச் சொந்தமாக்கவேண்டிய பொது சொத்துக்கள்.

ஒவ்வொரு கிராமத்திற்கும் பொது சொத்து உண்டு. அவைகள், பொரம்போக்குகள் என்றும் கிராம மனைகள் என்றும், ஏரி பொரம்போக்குகள் என்றும், கதிர் அடிக்கும் களம் என்றும், பலவகைப்படும். இதன் ஆரம்பத்தை கிராம ஸ்தாபனத்திலிருந்தே காணமுடியும். விவசாயமே பெரும்பாலும் வழங்கிவந்த ஆதிகாலத்து கிராம பொது வாழ்க்கையை விருத்தி செய்யும்பொருட்டு இவை எற்பட்டன. முன்காலத்து அரசர்கள் ரொம்ப தீர்க்க திருஷ்டியுடன், பல விதமான பொது சொத்துக்களை, அதிக போக்கு வரவு சாதன அபிவிருத்திக்காக ரோட்டு பொரம்போக்குகளும், நெல்கதிர்களை சேகரித்து தாள் அடிப்பதற்கு களங்களும், சந்தைகள், திருவிழாக்கள் முதலியன நடக்க கிராம நத்தங்கள், இவைகளை ஏற்படுத்தினார்கள். இத்துடன் பொது ஊழியர்களும் கிராமத்து ஜனங்களின் நன்மைக்காக ஏற்பட்டார்கள். பொதுவாக கிராமமானது மேற்சொன்ன சொத்துக்களுக்கும், ஊழியர்களுக்கும் உறியது. ராஜாங்கம் அவைகளுக்கு டிரஸ்டியாக மாத்திரம் இருந்தது. கிராமமும், கிராம ஜனங்களும் இருக்கும் வரையில் மேற்படி உறிமைகளை ஒருவராலும், ராஜாங்கத்தாலும் கூட நீக்க முடியாது. எதற்காக அவைகள் ஏற்படுத்தப்பட்டனவோ அவைகள் தீர்ந்துபோனால்தான் ராஜாங்கம் அவைகள் விஷயத்தில் தலையிட முடியும். இந்த நிலமை சட்டப்பூர்வமாக சந்தேகத்திற்கு இடமில்லாமல்

ஒப்புக்கொள்ளப்பட்டதே. இந்த பொது பாத்தியதையையும், பொது ஊழியத்தையும் தடுப்பதற்காக செய்யப்படும் எல்லா முயற்சியும் கிராமத்தின் பொது வாழ்கையை கெடுக்கும்.

ஆதி காலம் முதல், கிராமங்கள், கிராம பஞ்சாயத்துகள் மூலம் கிராம விவகாரங்களையும், கிராம சொத்து, ஊழியம் முதலியவைகளையும் கவனித்து வந்தன. உத்தரமேரூர் சாஸனங்கள், மனு, 'அர்த்த சாஸ்திரத்தில்' கௌடில்யர் சொல்லியிருப்பது, புத்த மத நூல்கள், இவையெல்லாம் கிராம பஞ்சாயத்துகள் கிராம பொது சொத்துக்கள் பரிபாலனத்தைப்பற்றி விவரமாக கூறியிருக்கின்றன. நாமகார்த்தமாக தேசத்தின் உரிமையெல்லாம் கடைசியாக அரசனுடையதாக இருந்தபோதிலும், முன் காலத்து அரசர்கள் இந்த பொது சொத்துக்களை பொது ஜனங்களின் நன்மைக்காக கிராம பஞ்சாயத்துகளிடம் ஒப்படைத்திருந்தார்கள். ஹிந்துக்களும், மஹமத்தியர்களும் அரசாண்ட காலத்தில் நிலமை இவ்விதம் இருந்தது. பிரிடிஷ் அரசாங்கத்தாரும் கிழக்கு இந்தியா கம்பெனி நாள் முதற்கொண்டும், 1802ம் வருஷம் முதற்கொண்டும் தங்களுடைய அநேக சட்டங்கள் மூலம் இந்த பொது பாத்தியதையை காப்பாற்றி வந்தது. ஆனால் சமீப காலத்தில் ஜில்லா அதிகாரிகள் கிராம விஷயங்களில் அவ்வளவு அக்கரையெடுத்துக் கொள்ளாமல், அந்த ஸ்தல அதிகாரிகளிடம் அவைகளை விட்டு விடுவதைப் பற்றி நாம் குறிப்பிட கடமை பட்டிருக்கிறோம். இந்த அதிகாரிகள் கிராம பொரம்போக்கு நிலங்களுக்கும், பொது நிலங்களுக்கும், தனிபட்டா கொடுக்க சிபார்சு செய்கிறார்கள். அதனால் இந்த முக்கியமான கிராம பொது சொத்துக்கள் அழிவடைகின்றன. கிராம ஜனங்களின் யோஜனையாவது விருப்பமாவது கேழ்க்கப்படுவதில்லை. 1920 முதல் அநேக கிராமங்களில் பஞ்சாயத்துகள் ஏற்பட்டிருந்தபோதிலும், கவர்மெண்டார் பொது நிலங்களைக்குறித்து பட்டா கொடுப்பதற்குமுன் கிராம ஜனங்களின் யோஜனையை கேழ்க்க வேண்டும் என்று உத்திரவு செய்திருந்தபோதிலும், அவ்விதம் ஒரு போதும் செய்யப்படுவதில்லை. கிராம பஞ்சாயத்தை கவனிப்பதில்லை. கிராம ஜனங்களின் நன்மையும் கவனிக்கப்படுவதில்லை. அநேக கிராம பொரம்போக்கு நிலங்கள், வயல்களுக்கு போகும் ரஸ்தாக்கள், கிஸ்து விதிக்கப்பட்டு, பட்டா செய்து கொடுக்கத் தகுந்தவையென்று கிராம ஜனங்களின் விருப்பத்தை அனுசரிக்காமல் செய்யப்பட்ட அநேக உதாரணங்கள் நாங்கள் கொடுக்கமுடியும். கிராம அதிகாரிகள், ரெவின்யூ இன்ஸ்பெக்டருடன் கலந்து, தாசில்தாருக்கு மனு அனுப்புகிறார்கள். தாசில்தார் தற்கால முறைபடி அந்த யோசனையை ஏற்றுக்கொண்டு, பொது பொரம்போக்கு நிலங்களை காம்பு நிலங்களாக குறிப்பிடுகிறார்கள். பிறகு வரிவிதிக்கப்படும் ஷெடி காம்பு நிலங்களை பட்டாசெய்ய யோசனைகள் செய்யப்படுகின்றன. இதன் விளைவு மெதுவாக கிராம பொதுசொத்து அழிந்து போகிறது. கிராம ஊழியங்களின் சிதறுதலைப்பற்றி நாம் இந்த பத்திரிகையில் குறிப்பிட்டிருக்கிறோம். அவைகளை சீர்திருத்த கவர்மெண்டார், போர்டு ஸ்டாண்டிங்கு

ஆர்டர்சுகளில் சில திருத்தங்களைச் செய்தார்கள். ஆயினும் அவை முற்றி லும் சீரடைய இன்னும் அநேக சீர்திருத்தங்கள் செய்யவேண்டும். இப்போது பொது சொத்தை எடுக்க முயற்சி ஏற்பட்டிருக்கிறது. கிராம நத்தங்களும் தனி நபர்களுக்கு பட்டா செய்யப்பட்டு மாற்றப்பட்டிருப்பதையும் நாம் குறிப்பிடவேண்டும். இந்த மிகவும் அவசியமான பொதுஜன சொத்துக்கு மிகவும் ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 1920-ம் வருஷத்திய 15-வது சட்டம் கிராம பஞ்சாயத்துகளை ஏற்படுத்தியது. 1930-ம் வருஷத்திற்குள் 7,000 பஞ்சாயத்துகள் ஏற்பட்டன. இவைகளுக்கு கிராம வாழ்க்கையையொட்டின பல வித வேலைகள் ஒதுக்கப்பட்டன. பஞ்சாயத்துகளின் கடமைகளின் ஷெடியூலை கவனிக்கவும். 1930-ல் ஸ்தல ஸ்தாபன சட்டம் திருத்தப்பட்டு 1920ம் வருஷத்திய 15-வது சட்டம் ரத்து செய்யப்பட்டது. ஆனால் இந்த இரண்டு சட்டங்களிலும் இந்த பொது சொத்தை பஞ்சாயத்தினிடம் ஒப்படைக்கும்படியான ஷரத்து போடவில்லை. 1924 முதல் 1930 வரையில் அநேக பஞ்சாயத்துகள் 'கவர்மெண்டார் உதவி நிதியைக் கொண்டு, கிராம பொரம்போக்கு நிலங்களை ரஸ்தாக்களாக செய்தன. இந்த பொது சொத்துகள் கவர்மெண்டுக்குத்தான் சொந்தம் என்ற காரணத்தினால், அந்த ஸ்தல ரெவின்யூ அதிகாரிகள் பஞ்சாயத்துகளின் விருத்தியில் அக்கரையில்லாமல், பொரம்போக்குகளை ரஸ்தாக்களாக செய்யவோ, வேறுவிதமாக மற்றவோ, பஞ்சாயத்துகளுக்கு அதிகாரமில்லை என்று ஆக்ஷேபித்தார்கள். ஆகையால், பஞ்சாயத்துகள் இவைகளை குறித்து எதாவது செய்யவேண்டியிருப்பதற்குமுன், இந்த பொரம்போக்குகளை பஞ்சாயத்துகளுக்கு மாற்றவேண்டுமா என்பது கிளம்பியது. அப்போது பஞ்சாயத்துகளுக்கு ரிஜிஸ்ட்ரார் ஜெனரலாயிருந்த டி. ஜி. ரூதர் போர்டு துரைக்கு இது அனுப்பப்பட்டு, அவர் பொரம்போக்குகளை சீர்படுத்தவும், ரஸ்தாக்கள் போடவும் பொருட்டு பஞ்சாயத்துகளுக்கு ஷெ நிலங்களை மாற்றுவது அவசியமில்லை என்று தனது அபிப்ராயத்தை தெரிவித்தார். ஆனால் சமீபத்தில் கவர்மெண்டார் ரூதர்போர்டு துரையின் அபிப்பிராயத்தை அங்கீகரிக்காமல், பஞ்சாயத்துகள் முதலில் ரெவின்யூ இலாகாவிடமிருந்து ஷெ நிலங்களை மாற்றிக்கொள்ளாமல், ஷெ நிலங்களை சீர்படுத்தவோ, ரஸ்தாக்கள் போடவோ அதிகாரமில்லை என்று உத்திரவு போட்டிருக்கிறார்கள். சில பஞ்சாயத்துகள் உத்திரவின்றி பணம் செலவு செய்ததற்காக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. 1926-ல் பஞ்சாயத்தின் மனுவின்பேரில் கிராம பொது பொரம்போக்குகளை தங்களுக்கு மாற்றும்படி கோறி பஞ்சாயத்துகள் மனு செய்தால், அவைகளை ஆதரிக்கும்படி ரெவின்யூ போர்டானது ஜில்லா கலெக்டர்களுக்கு தெரிவித்தது. அநேகமாக எல்லா பஞ்சாயத்துகளும் அப்படி மாற்றும்படி மனு செய்தன. அநேகமாக எல்லா மனுக்களும் நிராகரிக்கப்பட்டன, அல்லது 3, 4, வருஷங்கள் ஆகியும், அவைகளை குறித்து ஒரு உத்தரவும் போடப்படவில்லை, என்று நாம் நிச்சயமாய் கூறலாம். இதனால் 1936 முதல் 1941 வரையில், அநேக பஞ்சாயத்துகள் கிராம

ரஸ்தாக்களை சீர்படுத்த பணம் செலவு செய்ய முடியாத நிலைமையில் இருந்தன. 1937-1939-ல் ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டராய் இருந்த டி. என். ஸ்டராதி துரையவர்கள் இது விஷயமாக செலவழிக்கப்படாமல் பாங்கிகளில் கிடந்த பஞ்சாயத்து பணத்தைப்பற்றியும் அவைகள் செலவழிக்கப்படாததின் காரணங்களைப்பற்றியும் ஒரு புள்ளி விவரம் எடுத்தார். அதைப்பற்றி கவர்னரின் ஆலோசனையாளர் கவனமாக கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

தோட்டிகளால் அப்புறப்படுத்தப்பட்ட குப்பைகளை கிராம பொது நிலத்தில் ஒரு பக்கத்தில் சேகரித்துவைப்பது கூடாது என்று அநேக பஞ்சாயத்துகள் தடுக்கப்பட்டன. தோட்டிகளுக்கு கொட்டாய்களும் போட இயலவில்லை. இந்த விஷயங்களில் ரெவின்யூ இலாகாவானது கிராம பொது நிலங்கள் பஞ்சாயத்துக்கு சொந்தமில்லையென்றும், அவைகள் பஞ்சாயத்துக்கு மாற்றப்படவில்லையென்ற காரணத்தாலும், பஞ்சாயத்துகளின்மீது ஆக்கிரமிப்புக்காக நடவடிக்கை எடுக்க ஆரம்பிக்கிறது.

மாற்றவேண்டிய அவசியமில்லாமல், எல்லா பொது கிராம நிலங்களும் கிராம பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று நாம் எப்போதும் வற்புறுத்திருக்கிறோம். இந்தமாதிரி ஒரு தீர்மானம் 1938-ல் நடந்த பஞ்சாயத்து மகா நாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மதராஸ் பஞ்சாயத்து போர்டுகளின் மாகாண சங்கமானது ரூதர்போர்டு துரையவர்களுக்கு சமீபத்தில் பஞ்சாயத்து மசோதாவைக் குறித்து சமர்பித்த யாதாஸ்தில், இந்த விஷயத்தை அனுகூலமாக கவனிக்கும்படி வற்புறுத்தியது. கவர்மெண்டால் நியமிக்கப்பட்ட செலக்ட்டு கமிட்டியானது இந்த விஷயத்தை ஆலோசிக்க வேண்டிவரும். இந்த பிரச்னை திருப்திகரமாக தீர்ந்தாலொழிய ஒரு பஞ்சாயத்தாவது தனது கடமைகளை சரிவர செய்ய முடியாது. ஸ்தல ரெவின்யூ அதிகாரிகளின் உத்தரவை பஞ்சாயத்துகள் எதிர்பார்க்கும்படியான நிலமை ஏற்படக்கூடாது. சட்ட மூலமாக பஞ்சாயத்துகளிடம் அந்த உரிமை ஒப்படைக்கவேண்டும்.

ஆனால் சில பஞ்சாயத்துகள் இந்த அதிகாரத்தை துர்விநியோகப்படுத்தி பொது சொத்துக்களை பராதீனம் செய்யலாம் என்ற அச்சம் இருக்கலாம். ஆனால் அதற்கு வேண்டிய நிர்பந்தங்கள் சட்டசபை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

மே. த. கவர்னரின் ஆலோசனையாளர் இந்த குறையை நீக்கி, கிராம ஜனங்களுக்கு கிராம பொதுசொத்துகளுடைய பாத்தியதையை மீண்டும் கொடுப்பார் என்று திடமாக நம்புகிறோம். பொது சொத்துக்கள் ரெவின்யூ இலாகா அதிகாரிகளுக்கு உட்பட்டிருப்பதற்கு யாதொரு காரணமாவது நியாயமாவது இல்லை. சுமார் 20 வருஷ அனுபவத்திலிருந்து, இந்த பட்டா மாற்றும் விஷயமாக உத்தரவுகளை, அதிலும் தாமதமின்றி உத்தரவுகளை ரெவின்யூ இலாகாவிடமிருந்து எதிர்பார்க்கமுடியாது என்று தெளிவாகிறது. ரெவின்யூ அதிகாரிகள், கவர்மெண்டு உத்தரவுகளையும் மீறி

பொரம்போக்குகளை பஞ்சாயத்துகளுக்கு மாற்றக்கூடாது என்ற தீர்மானம் கொண்டிருப்பதாக அனுபவத்திலிருந்து தெரிகிறது. பொது சொத்துக்களின் பாத்தியதையை பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்காமல் பண்டை காலத்து கிராம சுதந்திர அரசாக்ஷியை மறுபடியும் நிர்மாணம் செய்வது என்பது வெரும் பலனற்றது. அப்போது இருந்த கீர்த்தியும் கிடைக்காது.

வாசகர்களே—தயவுசெய்து பொரம்போக்குகளைமாற்றும் விஷயத்தில் உங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைக்குறித்து தெரிவியுங்கள்.

இந்த இதழில் ரெவின்யூ இலாகாவிடமிருந்து பொரம்போக்குகளை மாற்ற உத்திரவு கிடைப்பதில் ஏற்படும் காலதாமதத்தை பற்றி எழுதியிருக்கிரோம். பொரம்போக்கு மாற்றுவதற்கு மனுசெய்து, உத்திரவே கிடைக்காமலும், அதிகம் தாமதித்து கிடைத்துமிருக்கிற பல பஞ்சாயத்துகள் எங்களுக்குத் தெரியும். மாற்ற உத்திரவு அவசியமில்லாமல் சட்ட பூர்வமாக எல்லா பொது சொத்துக்களை பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கும்படி நாம் கவர்மெண்டுக்கு மிகவும் வற்புறுத்தியிருக்கிரோம். பஞ்சாயத்துகளை இது விஷயமாக தங்களுடைய அனுபவங்களை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிரோம்.

பஞ்சாயத்துகளுக்கு விண்ணப்பம்.

1941-42-க்குச் சேரவேண்டிய சந்தா தொகைக்காக நாம் வி.பி. தபால் மூலம் அனுப்பினோம். சுமார் 300 பஞ்சாயத்துகள் 1941-42 வருஷத்து பத்திரிகையை பெற்றபோதிலும், வி. பி. யை வாங்க மறுத்து விட்டன. இவைகள் பத்திரிகை அனுப்பவேண்டாம் என்று எங்களுக்கு தெரிவிக்கவில்லை. ஆகையால் ஏன் வி. பி. மறுக்கப்பட்டன என்று எங்களுக்கு விளங்கவில்லை.

வருஷ சந்தா ரூபாய் 2-தான். எந்த எளிய பஞ்சாயத்துக்கும் அனுப்ப முடியும். சங்கத்தின் பலம் அதன் அங்கத்தினர்கள் பலத்தைப் பொருத்தது என்று சொல்லியிருக்கிரோம். சங்கமானது பஞ்சாயத்துகளுடைய நண்பன். பஞ்சாயத்துகளின் உரிமைகளுக்கும், நன்மைகளுக்கும் அது பாடுபட்டுவருகிறது.

ஆகையால் நாம் வி. பி. வாபஸ் செய்த எல்லா பஞ்சாயத்துகளையும், தங்கள் தீர்மானத்தை புனராலோசனை செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிரோம். பாக்கி சந்தா துகையை செலுத்துவதோடல்லாமல், 1942-43 வருஷத்திய பத்திரிகையையும், சங்கத்தையும் ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிரும். காகிதம் விலை அதிகமாகிவிட்டதால், வருஷ சந்தாவை ரூ. 2 இருந்து ரூ. 3-ஆக செய்ய கவர்மெண்டு அனுமதித்திருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்தையும் ரூபாய் 3 இதற்கு ஒதிக்கி, ஷை துகையை கூடிய சீக்கிரத்தில் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிரோம். பணமின்றி ஒரு காரியமும் சாதிக்க இயலாதன்றோ!

விவசாய சங்கங்களும், அவைகள் ஏற்படுத்தும் முறையும், நடவடிக்கைகளும்.

விவசாய இலாகாவால் பிரசாரம் செய்யப்படும் புது முறை விவசாயமானது, ஒவ்வொரு கிராமத்திலும் இலாகா டிமான்ஸ்ட்ரேடர் தங்கும் சொற்ப நாட்களில் கிராம விவசாயிகள் எல்லாரையும் சந்திக்க முடியாமல் போவதால், கிராமங்களில் அதிகம் பரவவில்லை என்பது உணரப்பட்டது கிராம விவசாயத்தில் இப்போது அனுஷ்டிக்கப்படும் புராதனமான முறைகளுக்குப் பதில் புதிய முறைகள், தேர்ச்சியான விதைகளை உபயோகித்தல், புதிய கருவிகள், எருக்கள் இவைகள் விஷயமாய் நேரில் செய்து காட்டாமலும், ஒருவருக்கொருவர் கூடி ஆலோசித்து விவரித்து சொல்லாவிட்டால், புது முறைகளை அனுஷ்டிக்கச் செய்வது மிகவும் கஷ்டம் என்பது தெளிவாயிற்று. ஆகையால் கிராமங்களில், முக்கியமாக விவசாய டிமான்ஸ்ட்ரேடர் இருக்கும் ஸ்தலங்களில், கிராம சங்கங்கள் ஏற்படுத்தி, கொஞ்சம் படித்தவர்களும், ஊக்கமுள்ளவர்களும் அந்த உத்தியோகஸ்தருடன் கலந்து, விஷயங்களை ஆலோசித்து, புதிய முறைகளை பரிக்ஷார்த்தமாக அனுசரித்து பார்த்து, அதனால் கிடைத்த அனுபவத்திலிருந்து தகுதியானதும், உபயோககரமானதுமான முறைகளை கையாள ஒரு சந்தர்ப்பம் அளிக்கவேண்டி மேற்படி சங்கங்கள் ஏற்படுத்தவேண்டும் என்று நிச்சயிக்கப்பட்டது. விவசாய டிமான்ஸ்ட்ரேடர் புதிய முறைகளை குடிகளின் நிலத்திலேயே அநேகமாக கவர்மெண்டு செலவில் பரிக்ஷித்துப்பார்க்கிறார். அந்த அனுபவத்திலிருந்து, நல்ல முறைகளைக் குறித்து விவசாயிகளின் ஆலோசனைகளையும் கேட்டு ஒரு ஸ்தலத்தில் செய்யவேண்டிய ஒரு திட்டம் தயார் செய்து அதன் ஒவ்வொரு பகுதியை ஒவ்வொரு அங்கத்தினரிடம் ஒப்பிவித்து பிரசாரம் செய்யச் சொல்லி, அடிக்கடி விவசாயிகளின் பொதுக்கூட்டம் கூட்டி மேற்படி அனுசரிக்கப்பட்ட புது முறைகள், விதைகள் முதலியவைகளைப்பற்றி நன்றாக விவாதித்து, பிறகு எல்லோரும் அனுஷ்டிக்கும்படி ஏற்பாடு செய்கிறார். எல்லா விவசாயிகளும் ஏழைகள், பணக்காரர்கள், ஜாதி, மதம், என்ற வித்தியாசம் இல்லாமல், இந்த விவசாய சங்கத்தில் அங்கத்தினர்களாக சேரலாம். சந்தா தொகை செலுத்தவேண்டியதில்லை. ஆனால் தங்கள் நிலங்களில் புது முறைகளை ஊக்கத்துடன் பரிக்ஷித்துப் பார்த்து அதனால் எல்லாரும் நன்மையடைய பாடுபடவேண்டும். விதைகள், கருவிகள் முதலிய விவசாயிகளின் தேவைகளைப்பற்றியும், விவசாயத்தில் ஏற்படும் கஷ்டங்களைப்பற்றியும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டு, அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் டிமான்ஸ்ட்ரேடரால் ஜில்லா விவசாய அதிகாரிக்கு தெரிவிக்கப்படும். அவர் வேண்டியவைகளை செய்யும்படி ஏற்பாடு செய்வார், அல்லது தானாகவோ அல்லது ஜில்லா கலெக்டரை அப்போது அப்போது சந்திக்கும் சமயங்களிலோ மேற்படி விஷயங்களை கவனிக்கும்படி தகுந்த உத்தியோகஸ்தர் மூலம் ஏற்பாடு செய்வார். புது முறையிற் தயாரித்த விதைகள், கலப்பைகள், இவைகளை வாங்க விரும்பும் ஏழை விவசாயிகளுக்கு கடன் வாங்கிக் கொடுக்க டிமான்ஸ்ட்ரேடர் ஏற்பாடு செய்வார். இந்த விஷயங்களும், இன்னும் மற்ற விஷயங்களும், சங்கத்தின் கூட்டத்தின் போது அங்கத்தினர்களுடன் விவாதிக்கப்பட்டு, எல்லா விவரங்களும் குறித்துக் கொள்ளப்படும். டிமான்ஸ்ட்ரேடர் எப்பெப்போது சாத்தியமோ அப்போதெல்லாம் கூட்டம் போடுவார். ஆகையால் இந்த சங்கத்தில் அங்கத்தினராவது விவசாயினுடைய நன்மைக்கே. அதன் கூட்டங்களில் ஆஜராகி பங்கெடுத்துக் கொண்டால், அறிவ, அனுபவம் விருத்தியடைவதில்லாமல், அரசியல் விஷயங்களில் தலையிட்டால் ஏற்படும் கஷ்டம்போல், இங்கு ஒன்றும் கஷ்டம் ஏற்படாது. உபயோகமான துறையில் முதல் பாடுபட்டு உழைத்த திருப்தி உண்டாகும். சங்கத்தின் அங்கத்தினர்களான சில விவாசாயிகள் புது முறைகளை கையாண்டால், மற்ற விவசாயிகளும் அவர்களை பின்பற்றி அந்த அனுகூலங்களை யடைவார்கள். ஆகையால் நூதன முறைகள் பரவி, சாகுபடி விருத்தியாக அனுகூலமாக இருக்கும்.

கிராமவாசிகளின் நிலமை அபிவிருத்தி.

ராவ் சாகிப் ஜி. ஜோகிராஜு
(மாஜி விவசாய இலாகா அசிஸ்டண்ட் டைரக்டர்.)

இது வரையில் பஞ்சாயத்துகள் பட்டணங்களிலும், பெரிய கிராமங்களிலும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. சமீப காலமாக அவை சிறிய கிராமங்களிலும் ஸ்தாபிக்கப் பட்டுள்ளன. கிராமத்திலுள்ள பெரும்பாலான ஜனங்கள் விவசாயத்திலாவது வேலை செய்தாவது ஜீவனம் செய்கிறார்கள். இப்போது பஞ்சாயத்துகள், தங்கள் வசூல்செய்யும் நில வரி தவிர, கவர்மெண்டிடமிருந்து லோகல் செஸ்ஸில் ஒருபாகமும், வீட்டு வரியாலும் கொஞ்சம் இதர வசூல்கள் மூலமாகவும் கிடைக்கும் பணத்தை சிலவழித்து, கிராம ஜனங்களுக்கு சௌகர்பத்தை அதிகரிக்கும் வேலைகளை செய்து வருகின்றன. அநேக பஞ்சாயத்துகளின் வருமானம் மிகக்குறைவாக இருப்பதால், அந்த ஜனங்களுக்கு நன்மைகளை திருப்திகரமாக செய்ய சாத்யப் படுவதில்லை. ஆகையால், வரும் வருமானத்தை ஜாக்கிரதையாக செலவழித்து, துர்விநியோகம் செய்யாமல் அக்கரையுடன் பாடுபட்டு, ஜனங்களின் க்ஷேமத்திற்கும் வவிசாய அபிவிருத்திக்கும் உழைத்தால் அது மிகவும் நன்மையையும், பலனையும் அளித்து, பிறகு நல்ல சந்தர்பம் கிடைத்து வருமானம் அதிகரிக்க சுலபமாகவிருக்கும். இப்போது இருக்கும் பஞ்சாயத்து மசோதா ஜனங்களின் நிலைமையை சீர் படுத்த முடியவில்லை என்று தெரிகிறது. ஆகையால் வரப்போகும் மசோதாவிலாவது இது விஷயமாக அதிகம் கவனம் செலுத்தப்படவேண்டும்.

பஞ்சாயத்துகள் ஜனங்களின் விவசாய விஷயங்களில் அபிவிருத்திக்கான வழிகளை பின்பற்றுவது தவிர மேல் கொண்டு செய்யவேண்டிய இதர வேலைகளை கீழே குறிப்பிட்டிருக்கிறேன். அநேக கிராம ஜனங்கள் முக்கியமாக விவசாயத்திலும் அது சம்பந்தமான வேலைகளாலும் ஜீவனம் செய்வதால், இது விஷயமாய் ஜனங்களுக்கு போதித்து சரியான வழியை காட்ட ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஒரு கிராம சேவகரை நியமிக்கவேண்டும். இந்த கிராம சேவகர்கள் விவசாய விஷயங்களில் அதிக தேர்ச்சிபெற்றவர்களாகவும் கவர்மெண்டு விவசாய பண்ணைகளில் சேர்ந்து அனுபவம் பெற்றவர்களாகவும், பிரசாரம் செய்யும் திறமையுள்ளவர்களாகவும், இருக்கவேண்டும். நூல் நூற்பது, கயிறு பின்னுவது, கூடைகள் செய்வது, காகிதம் செய்வது முதலிய கைவேலைகளை அவர்கள் தெரிந்துகொண்டிருக்கவேண்டும்.

கிராம சேவகர்கள் செய்ய வேண்டிய சில முக்கியமான வேலைகள்.

(1) கவர்மெண்டு பண்ணைகளிலிருந்தாவது, இதர இடங்களிலிருந்தாவது நல்ல விதைகளை விவசாயிகளுக்கு கிடைக்கும்படி கிராம சேவகர்கள் செய்யவேண்டும். ஜனங்களுக்கு புது முறைகளில் பயிர் செய்வதைப்பற்றி போதிக்க வேண்டும். புது முறையில் இந்த வேலைகளை செய்து காட்டவேண்டும்.

(2) விவசாயிகளை மிகவும் முக்கியமான கால்நடைகளின் மூத்திரத்தை வீணாக்காமல், இதர எருக்களுடன் சேர்த்து மேன்மையான செழிப்பாக்கும் எருவாக்கும்படி அவர்களுக்கு போதிக்கவேண்டும்.

(3) ஒவ்வொரு பஞ்சாயத்தும் கிராமத்திற்கு கொஞ்சம் தூரத்தில் ஒரு பள்ளம் தோண்டி. அதில் இந்தூர் மோஸ்தரில் எருவை சேகரித்தால், அதனால் பஞ்சாயத்திற்கு நல்ல ஆதாயம் கிடைக்கும்.

(4) கிராம குளத்து காவல்காரன், தோட்டங்களின் காவல்காரன் முதலிய சிப்பந்திகளைக்கொண்டு, கிராமங்களில் தென்னை, மாமரம், பலா மரம், முதலிய மரங்கள், இன்னும் இதர செடி கொடிகள் இவைகள் பயிர்செய்து பஞ்சாயத்துகள் நன்மையும், லாபத்தையும் அடையலாம்.

(5) ஜனங்களுக்கு பால், பழங்கள், காய்கறிகள், முட்டைகள் இவைகள் நிறைய கிடைக்கவேண்டும். அவைகள் எப்படி அதிகமாக உற்பத்தியாக்கலாம் என்பதைப்பற்றியும், அதற்கு வேண்டிய சகாயமும் ஜனங்களுக்கு பஞ்சாயத்துகள் செய்யவேண்டும்.

(6) கிராமத்திலிருக்கும் வேலையற்ற ஜனங்களுக்கு, காகிதம் செய்தல், கயிறு பின்னுதல் முதலிய ஒரு கைத்தொழிலை கற்றுக்கொடுத்து, அதன் மூலம் கிராமத்தின் செல்வ நிலைமையையும் விருத்தி செய்து, ஜனங்களுக்கும் நன்மை செய்யலாம். இதர பிரம்தசங்களின் தயவை எதிர்பார்க்காமல் இருக்கவேண்டும்.

(7) கிராம நிலங்களின் மாசூல், கைத்தொழில் சாமான்கள், மேலும் கிடைக்கும் பண்டங்களை தேவைக்குமேல் இருந்தால் அவைகளை விற்பனை செய்து கொடுக்க கிராம சேவகர் துணையாக இருந்து சகாயம் செய்யவேண்டும். மேலும் ஜனங்களுக்குத் தேவையாயிருக்கும் சகல விதமான வஸ்துக்களும் அவர்களுக்கு கிடைக்கும்படி கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தியோ அல்லது அவைகளின் உதவியினாலோ, கிடைக்கும்படி இவர்கள் செய்யவேண்டும்.

(8) பஞ்சாயத்துகளின் ஏற்பாட்டின்படி கிராம ஜனங்களுக்கு பொது ஜன சுகாதாரம், சுத்தம், முதலிய விஷயங்களை பிரசாரம் செய்து, நன்மை செய்யவேண்டும்.

இந்த விதமாக கிராம பொருளாதார, விவசாய நிலைமைகளை சீர்திருத்த இந்த கிராம சேவகர்களை நியமிப்பதால்; ஏற்கனவே பணக்கஷ்டத்தினால் அவதிப்படும் பஞ்சாயத்துகள் மேலும் கஷ்டப்பட நேரிடும் என்று அச்சப்படலாம். ஆனால் பஞ்சாயத்துகள் சிக்கனமாகவும், ஊக்கமாகவும் மேற்சொன்ன காரியங்களையெல்லாம், அ-து எருவுகளை சரியாக தயாரித்து வீணாக்காமல் உபயோகித்தல், செடி, கொடி, மரங்கள் முதலியவைகளை வளர்த்து, லாபம் அடைதல் இன்னும் மற்ற வேலைகளை சரிவர செய்தால், கிராமசேவகரை நியமிப்பதால் ஏற்படும் அதிக செலவு தொகை எப்படியாவது கிடைக்காமல் போகாது.

ஜனங்களின் பொருளாதார நிலைமை விருத்தியடைந்தால், பஞ்சாயத்துகள் தங்களுக்கு சேரவேண்டிய பலவகை வரிகளை பாக்கியில்லாமல் வசூல் செய்ய அனுகூலமாக இருக்கும். ஜனங்கள் வரி. அதிகம் விதித்தாலும் அதனால் தங்களுக்கு நன்மையேற்படும் என்று தெரிந்து சந்தோஷத்துடன் அந்த வரியை செலுத்த முன்வருவார்கள்.

ஆகையால் பஞ்சாயத்துகள் இந்த வழிகளை சீக்கிரமாக அனுசரிக்க வேண்டியது அவசியம்.

கால் நடைகளின் தீனி சேமிப்பு.

கால் நடைகளுக்கு செழிப்பான, பசுமை சத்துள்ள தீனி தேவை. இந்தியாவில் பல பாகங்களில் புல் வருஷம் பூராவும் அகப்படுவதில்லை. வெயில் காலங்களில் புல்லானது கொஞ்சமாயும், மட்ட ரகமாகவும் இருக்கிறது. இது காரணம் பற்றி கால் நடைகள் பலமற்று இருக்கின்றன. அதுவும் சிரமமானதும், அவசரமானதுமானவேலை மழைகால ஆரம்பத்தில் செய்ய இருக்கும்போது, அவைகள் பலமற்று இருக்கின்றன. ஆகையால் கால் நடைகளுக்கு சரியான தீனியை கொடுக்க தகுந்த ஏற்பாடு செய்யவேண்டியது தேச நலத்திற்கு மிகவும் முக்கியம்.

தீனிகள் தயார்செய்யும் விதங்களாவன, பச்சை புல் வளர்பது, அருவடையான பின் வைக்கோலை சேகரித்து வைப்பது, வைக்கோல் செய்வது, பள்ளம் தோண்டி தீனி பத்திரப்படுத்துவது, போன்றவைகள்.

பச்சை புல் வளர்ப்பது.

நீர் பாய்ச்சல் வசதியுள்ள இடங்களில் இது செய்பலாம். அதில் சில ரகங்கள் எளிதில் வளரும், அவைகள் 'கினி' (Guniea) புல் என்றும் 'நேபியர்' புல் (Napier) என்றும் சொல்லப் படுபவை. 2, 3 வருஷத்திற்கு பசுமை சத்துடன் வளரும். பிறகு வேறு இடங்களில் வளர்க்கவேண்டும். 8, 10 தடவை பிடுங்கி நடலாம். 'கினி' புல்லைவிட 'நேபியர்' புல் இரட்டை மடங்கு செழிப்பு அதிகம், 'கினி' புல்லானது சாதாரண காலத்தில் ஒரு வருஷத்தில் ஒரு ஏகராவில் 20,000 முதல் 30,000 பவுண்டுகள் வளரும் என்று மதிப்பிக்கப்பட்டிருக்கிறது. 'ல்யூஸேர்ன்' (Lucerne) 'பிலிப்பேசாரா' (Pillipesara) என்பவையும் கால் நடைகளுக்குக் கொடுக்கலாம்.

'ல்யூஸேர்ன்' (Lucerne) என்பது கறவைமாடுகளுக்கு மிகவும் நல்லது. எல்லா உஷ்ண பிரதேசங்களிலும் பயிர் செய்யலாம். கொஞ்சம் சுண்ணாம்பு கலந்த மண்ணில் அது நன்றாக வளர்கிறது. அவைகள் விதைகள் விதைத்து கிளம்புகின்றன. விதைகள் சுலபமாக கிடைக்கும். 2, 3 விதைகள் பாத்திமேட்டுகளின் ஓட்டைகளில் விதைக்கப்படுகின்றன. அவை $1\frac{1}{2}$ அடி துலவு இருக்கும். ஒரு செடிக்கும், மற்றொரு செடிக்கு, 6, முதல் 9 அங்குலம் இடம் இருக்கவேண்டும். கால்நடை எருவுகள் மிகவும் ஏடுத்தவை. 10, 12 தடவை வெட்டி வைக்கப்பட்ட பயிர் வருஷத்தில் 10,000 முதல் 30,000 பவுண்டுவரையில் கொடுக்கும். 'பிலிப்பேசாரா' (Pillipesara) என்பதும் விதைவிதைத்து பயிர் செய்யப்படுகிறது. அது ஒரு வயலில் ஒரு வருஷத்திற்குமேல் நிற்காது. 'ல்யூஸேர்ன்' என்பது ஒரே வயலில் 3, 4 வருஷங்கள் இருக்கும்.

வைக்கோலை சேமிப்பது.

இதுதான் இந்தேசத்தில் செய்யப்பட்டுவரும் முறை. தான்ய பயிர்கள் அறுவடையானபின், வைக்கோலானது வயல்களிலேயே காய விடப்படுகின்றது. பிறகு போராக அடுக்கி வைக்கப்படுகிறது. வைக்கோல் மிகவும் புஷ்டியுள்ள ஆகாரமில்லாவிடினும், மற்றெதுவும் அகப்படாத சமயங்களில், கால் நடைகளுக்கு ஆகாரமாக உதவி, அவைகளின் உயிரை காப்பாற்றுகிறது.

2

உலர்ந்தபுல் தயாரிப்பது.

இந்தியாவில் உலர்ந்தபுல் அதிகமாக தயாரிக்கப்படுவதில்லை. எந்த தான்யத்தின் புல்லாவது, தான்யம் தென்படுவதற்குமுன் அறுக்கப்பட்டு, காற்றிலாவது, மற்றபடி எந்த ஏற்பாட்டினுலாவது உலர்த்தபட்டு, நல்ல தீனியாகிறது. புல்லை உலர்த்துவதால், நீர்சத்தை குறைத்து, புல் சுமைகளை பத்திரமாக சேர்த்துவைக்க செய்யப்படுகிறது. இல்லாவிட்டால், பச்சை புல் காம்புகளில் சில ரசாயன மாறுபாடுகள் அதிக உஷ்ணத்தினுல் ஏற்பட்டு, நெருப்பு உண்டாக காரணமாகும். மேலும் அதிக ஈரத்தினுல், மக்கிபோகும்.

இந்த புல் தயாரிப்பதற்கு நம்தேசத்தில் அதிக உபயோகமிருக்கிறது. பருவ கால மழைக்குப்பின், புல் நன்ருக முளைக்கிறது. அதை அப்படியே நல்லவெயிலில் காற்றுவாட்டத்தில் உலர்த்தி வைக்கோலாக்கிவிடலாம். அதற்கு ஏற்ற பயிர்செய்து, புல் தயார்செய்யலாம். அந்த புல்லை தேவைக்குமேல் வெயிலில் உலர்த்தக்கூடாது. அப்படிசெய்தால், நிறமும், சத்தும் போய்விடும். புல் நன்ருக உலர்ந்தபின் அதை போராக அடுக்கி ஓலைகளால் மூடலாம். முக்கியமாக கவனிக்கவேண்டியது என்னவென்ருல், புல்லை தான்யம் தென்படுவதற்குமுன், நல்ல வெயிலும் காற்றும் இருக்கும் போது அறுக்கவேண்டும்.

'சிலாஜ்' (Silage)

புல் வகைகளை மழையின்மையால் இத்தேசத்தில் ஏற்படும் பஞ்சகாலங்களில் உதவ பத்திரப்படுத்த மேற்சொன்ன முறைதான் மிகவும் சிக்கனமானது. ஒவ்வொரு குடியானவனும் தன் கால் நடைகளின் க்ஷேமத்தின் பொருட்டு, இந்த வழியை பின் பற்றவேண்டும்.

பசுமை தாள்கள் அடக்கமாக ஒரு குழியில் போடப்பட்டால், சில ரசாயன மாறுபாடுகள் அவைகளில் ஏற்பட்டு, அவைகளை பசுமையும் சத்தும் உடையதாக செய்கிறது. இது 'சிலாஜ்' (Silage) என்று சொல்லப்படும்.

இது செய்யும் நன்மைகளாவன.

அது பசுமையானது. ஆகையால் வைக்கோலை விட மேன்மையானது. அதிக காலம் வரும். நெருப்பு பயம் இல்லை. சிக்கனமானது. எந்த சமயத்திலும் எல்லா ருசியுள்ள கொடிகளையும் கூட 'சிலாஜ்' (Silage) செய்யலாம்.

ஒரே இடத்தில் வைக்கோலை விட அதிகம் சேகரித்து வைக்கலாம். அது ருசியுள்ளது. ஆகையால் அதிகம் கழிவடை யாவதில்லை. கால்நடைகள் நன்ருக புசிக்கின்றன.

'சிலாஜ்' (Silage) செய்ய எல்லா பச்சை புல், வறகு, சோளம், 'தினி' புல், 'நேபியர்' புல் முதலிய எல்லா வகைகளும் உபயோகப்படும். ஆனுல் எல்லாவற்றையும் விட பச்சை விறகுதான் ஏடுத்தது. அதை எளிதில் பயிர் செய்யலாம். அதை அறுக்கவேண்டிய சமயம் அது புஷ்பிக்கும் போது, அல்லது கதிர் விடும் சமயம்.

தயார் செய்யும் வழி.

6 அடி ஆழம், 18 அடி நீளம், 12 அடி அகலம் கொண்ட பள்ளம் ஒரு சமமட்டமுள்ள உயர்ந்த நிலத்தில் தோண்டப்படுகிறது. இந்த பள்ளத்தில் 3 ஏகரா வில் உண்டான வறகு தீனி கொள்ளும். 3 மாதத்திற்கு 6 கால் நடைகளுக்கு

வேண்டிய தீனி சேகரித்து வைக்கலாம். ஆழமான பள்ளத்தில் தீனியை எடுக்க அதிக ஆள்வேண்டும். சுற்றி கல் கட்டி சுவர் எழுப்பவேண்டிய அவசியமில்லை. கம்பிகளால் சுற்றிலும் கட்டினால் போதும். பக்கங்களில் செங்குத்தாக வெட்ட வேண்டும். ஒரு பள்ளம் தோண்ட 8, 10 ரூபாய்கள் செலவாகின்றன.

ரோப்புவது.

புல்லை சரியான சமயத்தில் அறுத்து உடனே பள்ளத்தில் போடவேண்டும். பள்ளம் நிரம்பியவுடன், மனிதர்களாவது, ஒரு ஜதை மாடுகளாவது அதன் மீது நன்றாக மிதித்து நடக்கவேண்டும். அப்போது நன்றாக அடர்த்தியாக சேர்ந்திருக்கும்.

பள்ளமானது நன்றாக மிதிக்கப்பட்டு பூமி மட்டத்திற்கு 2, 3 அடிக்கு வந்தபின், பக்கங்களில் மண் போட்டு அடைத்து, மேலே மண் போட்டு, காற்றாவது ஜலமாவது உள்ளே போகமுடியாத படி செய்யவேண்டும். பக்கங்களைக் காட்டிலும் மத்தியில் அதிக மண் போடவேண்டும். அப்படி செய்தால் வீட்டுக் கூரை மாதிரி ஒரு உயரம் உண்டாகி மழை ஜலம் வந்தால் அதை வெளியில் செறித்து விடும். உள்ளே போகாது. எல்லா பிளவுகளையும் அப்பப்போது மூடிவிடவேண்டும். பள்ளத்தினருகில் ஜலம் கொஞ்சமும் தேங்கவிடக் கூடாது. பள்ளத்தைச் சுற்றி ஒரு வாய்க்கால் கட்டி, தண்ணீரை வடிந்து போக ஏற்பாடு செய்யவேண்டும். இந்த காத்தடைப்பினால் உள்ளே புல்லில் சில ரசாயன மாறுபாடுகள் ஏற்பட்டு, கால் நடைகளுக்கு தகுதியான பசுமை தீனியாக மாறுகிறது. 8, அல்லது 12 வாரத்தில் தீனிக்கு தயாரான நிலமை ஏற்படுகிறது. கால்நடைகளுக்கு ஷை 'சிலாஜ்' (Silage) தேவையானபோது, (அதாவது பசும் தீனி அகப்படாத மாரிகாலத்தில்,) பள்ளத்தின் மேல் பாகத்திலுள்ள மண்ணை ஒரு மூலையில் ஒரு சதுர கஜத்திற்கு திறந்து, உள்ளே அடிவரையில் புல்லை வெளியில் எடுத்து விடவேண்டும். இப்படி செய்வதால், 'சிலாஜின்' மற்ற பாகங்கள் அப்படியே இருக்கின்றன. ஒரு எச்சரிக்கை. சிறிய சோள தட்டுகள் உபயோகப் படுத்தக்கூடாது. ஏனெனில் அது சிறியதாக இருக்கும்போது அதில் ஒரு விதமான விஷம் இருக்கிறது. அதைத் தின்றால் கால் நடைகள் இறக்க நேரிடும்.

ஆனால் இந்த விஷம், பயிர்முத்தி கதிர் எடுக்கும் சமயத்தில் மறைந்து விடுகிறது.

எல்லா கால் நடைகளுக்கும் 'சிலாஜ்' ஆகாரமாக கொடுக்கலாம். கறவை பசுக்களுக்கு 40 பவுண்டு வரையில் கொடுக்கலாம். அதை தின்றால் பால் அதிகமாகும். மணம் கெடுவதில்லை. 'ஏ' விடாமின் சத்து பாலில் அதிகமாகிறது. வியாதியால் புண்வந்த கால் நடைகள் இந்த ஆகாரத்தை ருசித்து புசிக்கின்றன. 4 மாதத்திற்கு மேலான கன்றுகளும் தாராளமாகத் தின்னலாம். சில கால்நடைகளுக்கு இது அவ்வளவாக பிடிக்காது. அப்போது இதை மற்ற ஆகாரங்களோடு கலந்து கொடுத்து, பழக்கப்படுத்த வேண்டும். மக்கி கெட்டுப்போன 'சிலாஜை' கொடுக்ககூடாது. அப்படிசெய்தால் கால் நடைகளுக்கு அபாயம் நேரிடும்.

வர்த்தமானங்களும், குறிப்புகளும்.

கிராம திட்டங்களுக்குத் தேவையான பணத்திற்கு ஏற்பாடு.

சர் மால்கம் டார்லிங் என்பவர் ஒரு உபந்நியாசத்தில், கிராம அபிவிருத்தி சரியான அஸ்திவாரத்தின் பேரில் ஏற்பட வேண்டுமானால், சரியான தலைவரும், தேவையான பணமும் அகப்பட வேண்டும் என்று சொல்லி, பண விஷயமாய் வாஸ்தவத்தில் அதிக கஷ்டம் இருக்கவேண்டியதில்லை என்றும் சொல்லியிருக்கிறார். கிராம புனருத்தாரண வேலைக்குத் தேவையான செலவை வரி மூலம் தாங்க இந்தியா மிகவும் ஏழ்மையானதும், வரி பளுவு மிகுந்ததுமான நாடு என்று சொல்லுகிறார். அதற்காக 100 கோடி ரூபாய் கடன் வாங்க வேண்டும் என்று சொல்லுகிறார். அது உள் நாட்டு சாஸ்வதமான கடனாக இருக்கவேண்டும், அதற்குத் தேவையான பணம், குறைந்த வட்டிக்கு, இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் கிட்டிவிட்டது என்ற உத்சாகத்தினால் ஜனங்கள் கொடுக்க முன்வருவார்கள். அந்த தொகையை, கிராமங்களில் கிராமங்களும் பண மூலமாவது, சொத்து மூலமாவது, தொழில் மூலமாவது சமமாக பங்கெடுத்துக் கொள்ளும்படியான திட்டங்களுக்கு விநியோகித்தால் இரட்டிப்பு லாப மேற்படும் என்கிறார். இந்த யுத்தத்தில் இந்தியா செய்த உபகாரத்திற்கு 'நன்றி காட்டி, இந்த யுத்த முடிவில் இங்கிலாந்து தேசமானது 100 கோடி ரூபாய் சன்மானமாக அளித்தால் அது போற்றத்தக்கது என்றார். ஒரு புத்தகத்தில், சர் ஜார்ஜ் ஷூஸ்டர், ஒவ்வொரு யூனிவர்சிடியிலிருந்து தேறிவரும், ஒவ்வொரு மாணாக்கனும் ஒன்று அல்லது இரண்டு வருஷங்கள் கிராம உபாத்தியாயராக உழைக்கவேண்டியது என்ற நிபந்தனை ஏற்படவேண்டும் என்கிறார்.

* * *

அகில இந்திய ஸ்திரீகள் மகாநாடு—கிராம முன்னேற்றம்.

காக்கிநாடாவில் சென்ற டிசம்பர் மாதம் கூடிய அகில இந்திய ஸ்திரீகள் மகாநாட்டில், கிராமங்களில் ஊழியர்களை தேர்ச்சிசெய்வது பற்றி ஒரு தீர்மானம் நிறைவேறியது. கூர்ஜரத்தில் ஒரு கிராமத்தில் பரிக்ஷித்துப் பார்க்க தீர்மானித்தது. சமீபத்தில் உலக சுற்றுப் பிரயாணம் செய்த ஸ்ரீமதி கமலாடின் என்பவரை இந்த முதல் வேலையை பூர்த்திசெய்ய நியமித்து, மிஸ் சாராபாய் என்பவரை இரண்டாவது சொன்ன வேலையை பூர்த்திசெய்ய நியமித்தது.

* * *

ஒரு கொம்புடைய எருது.

பிரிடிஷ் பிரீசியன் கால் நடைகள் சங்க வருஷாந்தர காக்ஷியில் (British Friesian Cattle Society Annual Show) ஒரே கொம்புடைய ஒரு எருது 3,100 கினிக்கு விற்கப்பட்டது. 25 வருஷம் ஏற்படாத அதிசயம் ஏற்பட்டது.

மதராஸ் ப்ரோவின்ஷியல் கோஆபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

தலைமை ஆபீஸ்.

சைனா பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு:

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

ஹிப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

சைதாபேட்டை பிராஞ்சு:

38, காரிணீஸ்வரர் கோயில் தெருவு, சைதாப்பேட்டை.

பிரசிடேண்டு:

மிஸ்டர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி.

ஸெக்ரடேரி:

டி. ராகவேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதராஸ் கார்பரேஷனுக்கும், மதராஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிசிப்பாலிடிகளுக்கும் பாங்காராக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும்:

ஸெக்ரடேரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. வியன்னா, பி.ஏ., பி.எல்.,
187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதராஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைந்திருக்கும்
சென்ட்ரல் கோஆபரேடிவ் அச்சுக்கூடத்தில்
மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடி, லிமிடெட், மதருஸ்.

ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜு, எம். எல். ஏ., (பிரஸிடேன்ட்.)

கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஒன்றே உங்களுக்குக் குறைந்த பிரிமிய விகிதங்களில் மிகுந்த பாதுகளிப்பதோடு, நல்ல வருஷவாரி லாபத்தொகையும் தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் மற்றும் உன்னத சலுகைகளும் காட்ட வல்லது.

லாபத்தொகை முழுவதும் பாலிஸிதார்களையே அடைகிறது. இந்த ஸொஸைடி அவர்களுக்கே சொந்தம், அவர்களுக்காகவே இருக்கிறது—அவர்களாலேயே நடத்தப்பெறுகிறது.

மிகச்சிக்கனமாக காரியாதிகள் நடத்தப்பட்டு, அரசாங்கத்தாரின் நேரான கண்காணிப்பில் பலமான க்ஷேமநிதி முதலியன ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதிக க்ஷேமகரமாக உள்ளது.

பாலிஸி தொகை	—	**1,30,00,000.**
க்ஷேமநிதி	—	**10,00,000.**

உங்களுக்குத் தக்க பாலிஸி விபரத்திற்கு எழுதுங்கள்.

வி. வெங்கடாசலம், எம். ஏ., பி. எல்.,
காரியதரிசி.